1974 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலையில் பணியாற்றிக்கொண்டிருந்தவர்களுக்கு அங்கே எந்தவிதமான வேலையும் கிடைக்காத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். மற்ற தொழிற்சாலைகளில்—அந்தத் துறையில் உள்ளவற்றில்—வேலைவாய்ப்பு ஏற்படுகிற நேரத்தில் அதுபற்றி கவனிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்

(அ) ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு துணை வினுக்கள் கேட்க போதிய வாய்ப்பு கொடுக்கப்படவில்லை என்பது குறித்து.

(முற்பகல் 10-00)

திரு. நா. வீராசாமி: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, ஆளும் கட்சியில் இருப்பவர்கள் பல முறை உங்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு கையை தூக்குகிறோம். கேள்வி நேரத்தில் உள்ளபடியே எங்களுக்கு ஒரு கோட்டா சிஸ்டம் வைத்திருக்கிறீர்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. எவ்வளவு கையை தூக்கினாலும், காகிதத்தை அசைத்தாலும், உங்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு முடியவில்லை. எந்த அடிப்படையில் நீங்கள் துணைக் கேள்விகளை ஒதுக்குகிறீர்கள்? ஆளும் கட்சியினருக்கு எவ்வளவு ஒதுக்குகிறீர்கள், எதிர்க்கட்சியினருக்கு எவ்வளவு ஒதுக்குகிறீர்கள் என்று தயவு செய்து தெரிவித்தால் நலமாக இருக்கும். ஆளும் கட்சியினர்கள் புறக்கணிக்கப்படுகிறோம்.

திரு. க. உரோ. எட்மண்ட்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய வீராசாமி அவர்கள் சில குறைகளைச் சொல்லி ஒரு ஒழுங்குப் பிரச்னையை கிளப்பியிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் நடைமுறைகள் நடக்கும்பொழுது, சபாநாயகர் எந்த விதத்தில் இந்த மன்றத்தை நடத்துகிறார்களோ, அந்த விதத்திற்கு நாங்கள் கட்டுப்பட்டவர்களாவோம். ஆனால், சட்டத்திற்குப் புறம்பாக நீங்கள் இந்த மன்றத்தை நடத்தினால்

அப்பொழுதுதான் ஒழுங்குப் பிரச்னையை கிளப்ப முடியும். துணைக் கேள்விகள் கேட்க உறுப்பினர்களை அழைப்பது சபாநாயகருடைய தனிப்பட்ட அதிகாரம், டிஸ்கிரஷனரி பவர். அதை யாரும் கேட்க முடியாது. மாண்புமிகு வீராசாமி அவர்கள் அடிக்கடி உங்களுடைய நடைமுறையைக் குற்றம் சொல்கிறார்கள். அந்த அளவுக்கு அவர் ஒழுங்கு பிரச்னையை எழுப்புவது முறைதானா?

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I am on a point of order. It seems I have to pay a serious penalty for going out of ADMK and I am never given a chance to put supplementaries. I never thought that it will be my fate. That does not mean I will go back there.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேவையில்லாத பாயிண்ட் ஆப் ஆர்டர்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நண்பர் வீராசாமி அவர்களுக்கு ஏற்கனவே இன்றையதினம் நான்கு முறை அந்த வாய்ப்பைக் கொடுத்ததற்குப் பிறகு கூட, அவர்கள் செல்லப் பிள்ளையாக இருந்தும் கூட, இந்த மன்றத்தில் அவர் இப்படிக் கேட்பது முறைதானா என்று கேட்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : இதை ஒட்டி ஒரு சிறிய பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்தக் கடைசி கேள்வி ஒரு தொழிற்சாலை மூடப் பட்டு, தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட காரியம். அவர்களுக்கு மாற்று வேலையும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவ்வளவு பிரதானமான கேள்விக்கு நீங்கள் போதுமான அளவு சந்தர்ப்பம் தரவில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்த வீராசாமி அவர்கள் எப்பொழுது ஆளும் கட்சியினருக்கு ஏதோ குறைபாடு இருப்பதைப் போல ஒரு தோற்றம் உண்டாக்கும் வகையில் பல நேரங்களில் இப்படி ஒழுங்குப் பிரச்னை என்று சொல்லி கிளப்பு கிறார்கள். ஆளும் கட்சியினர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது என்ற எண்ணத்தை உண்டாக்க வேண்டும் என்று திட்டமிட்டு இப்படிச் செய்கிறார்களோ என்ற சந்தேகம் தோன்றுகிறது. இது சம்பந்தமாக உங்களுடைய ஆணையை அறிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

1974 ஏப்ரல் 2]

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, இங்கே பாயின்ட் ஆப் ஆர்டரை முதலாவதாக எழுப்பியவர் வீராசாமி அவர்கள். ஆனால் அதன் பேரில் அத்தனை கட்சிக்காரர்களும் அவரவர்களுடைய அபிப்பிராயங்களைக் கூறுகிறார்கள். பாயின்ட் ஆப் ஆர்டருக்கு தீர்ப்புக் கொடுக்கவேண்டியது தலைவர் அவர்கள். அப்படி ஒவ்வொரு கட்சியினரும் அவரவர்களுடைய அபிப்பிராயங்களைச் சொல்வதற்காக ஒவ்வொரு முறையும் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி தங்களுடைய கருத்துக்களைக் கூறுவது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி பாயின்ட் ஆப் ஆர்டர்களை எழுப்புவதிலிருந்து மாண்புமிகு உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் கேட்பதில் எவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்கள் என்பது தெரியவருகிறது. இந்த அவையிலே எந்த அளவுக்கு துணைக் கேள்விகள் கேட்பதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறது என்பதற்கு நாளைக்கு வேண்டுமானாலும் ஒரு பட்டியலைக் கொடுக்கிறேன். அதிலிருந்து உறுப்பினர்கள் தெரிந்துகொள்வார்கள்.

3. அவை உரிமைப் பிரச்னை.

கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத் துணை வேந்தர் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவின் கூட்டத்தைச் சட்டப் பேரவை நடக்கும் நாளில் கூட்டியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோவை செழியன் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள்.

'Under Rule 184 of the Tamil Nadu Legislative Assembly Rules, I give a matter of privilege against the Vice-Chancellor, Tamil Nadu Agricultural University, Coimbatore to convene the Board of management meeting (of which I am a member, elected by the Assembly) on 27th March 1974 even though I had made a telegraphic request for a postponement of the meeting, on the plea I have to attend the Assembly on 27th March 1974. Sir, the decision of the Vice-Chancellor prevents me from discharging my duties as a member of this august House and hence